## போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டம் - 2020

---

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தம்பர் 29 ஆந் திகதிய 5788-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பகுதி II, பீ(3) கற்றும் 4.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. சொத்து முகாமைக்கான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திறனை அதிகரித்தல் மற்றும் பைலட் முகாமைத்துவ கோட்பாட்டிற்கான வெளியீடு மற்றும் செயல்திறன் சர்ந்த சலை ஒப்பந்த முறைமையை யன்படுத்தி வடிவமைத்தல் - நிர்மாணித்தல் - பராமரித்தல் முறையிலான ஒப்பந்தத்தின் முன்னோடி செயற்திட்டமாக பேகலியகொடவிலிருந்து புத்தளம் வரையான வீதியில் தெரிவு செய்யப்பட்ட 58 கிலோமீற்றர்கள் ஜா-எல – சிலாபம் வரையான வீதித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோலாகும். அபிவிருத்தி செய்யப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் எஸ்டிஆர் 90.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் அல்லது ரூபா 18,125 மில்லியனானதுடன் மொத்த தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சபையினால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. இருப்பினும், 2018 ஒகஸ்ட் 15 ஆம் திகதிய 18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவை திர்மானத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஆரம்பகட்ட வேலைப்பரப்பு மாற்றியமைக்கப்பட்டிருந்தது. அதன்படி, ஆரம்ப கடன் ஒதுக்கீட்டில் ரூபா 14,500 மில்லியனுக்குச் சமமான 100 மில்லியன் அமெரிக்க டொலர் செயற்திட்த்திலிருந்து நீக்கப்பட்டு அனைத்து மாகாண விதிகளின் மேம்படுகளிற்காக மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் மற்றும் விழையாட்டு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மீதமாகவுள்ள மீதியில், ரூபா 2,320 மில்லியனுக்குச் சமமான 16 மில்லியன் அமெரிக்க டொலர் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை தொடர ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 1,232.5 மில்லியனுக்குச் சமமான 8.5 மில்லியன் அமெரிக்க டொலர் வீதி பராமரிப்பு நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் மொத்த கடன் ஒதுக்கீடு 2020 மே 6 இல் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்ட வேண்டுகோலின் பிரகாரம் கோவிட் 19 பொறுப்பிற்கு அமெரிக்க டொலர் 7 மில்லியன் மற்றப்பட்டதன் காரணமாக ரூபா 1,305 மில்லியனுக்குச் சமமான 9 மில்லியன் அமெரிக்க டொலர் வரை மீண்டும் குறைக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 ஜுன் 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 ஒகஸ்ட் 15 இல் மீள் கட்டமைக்கப்பட்டு 2023 ஜுன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தய-ாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரிவு 3.2.1 | செயற்திட்டத்தின் ஆரம்ப மொத்த கிரயம் ஐ.அ.டொலர் 125 மில்லியன் 2020 ஜூன் 30 இலிருந்து ஐ.அ.டொலர் 9 மில்லியாக குறைக்கப்பட்டிருந்தும், செயற்திட்ட உத்தியோகத்தர்களிற்கான கொடுப்பனவுகள் செயற்திட்டத்தின் மாற்றியமைக்கப்பட்ட கிரயத்திற்கு ஏற்ப சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, மொத்தமாக ரூபா 145,000 செயற்திட்ட உத்தியோகத்தர்களிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரிவு 3.2.1 இற்கு முறனாக காணப்பட்டது. | 01 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட விபரங்களுடன் உடன்பட்டனர். செயற்திட்ட வேலைப்பரப்பு மற்றும் கிரயத்தின் குறைப்பு காரணமாக பீஎம்யூ உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை குறைக்க எம்எஸ்டி சுற்றறிக்கையில் எவ்வித தேவைப்பாடும் காணப்படவில்லை. | முகாமைத்தவ சேவைகள் சுற்றறிக்கையுடன் இணங்கி நடக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| விடயங்கள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | |
| | சதவீதம் | சதவீதம் | | |
| (1) சொத்து முகாமைத்துவம் மற்றும் அலகு ரீதியான திரன்மேன்பாடு போன்றவற்றை செயல்படுத்தல். | 13.05 | 8.22 | நடவடிக்கையின் பௌதீக செயலாற்றல் 4.83% இனால் இலக்கிற்கு பின்னால் காணப்பட்டது. | கோவீட் பரவரல் நிலை மற்றும் உத்தியோகத்தர்களை ஆர்சேர்ப்பதில் தாமதம் போன்ற காரணத்தால். |

| | | | | |
|---|---|---|---|---|
| (2) திறன் கட்டியெழுப்பல், பயிற்சியளித்தல் மற்றும் ஆலோசனை வழங்கள், வீதி பாதுகாப்பு. | 7.76 | 3.20 | நடவடிக்கையின் பௌதீக செயலாற்றல் 4.56% இனால் இலக்கிற்கு பின்னால் காணப்பட்டது. | கோவீட் பரவரல் நிலை மற்றும் உத்தியோகத்தர்களை ஆர்சேர்ப்பதில் தாமதம் போன்ற காரணத்தால். |
| (3) உபகரணங்கள். | 3.23 | 1.70 | நடவடிக்கையின் பௌதீக செயலாற்றல் 1.53% இனால் இலக்கிற்கு பின்னால் காணப்பட்டது. | கோவீட் பரவரல் நிலை மற்றும் உத்தியோகத்தர்களை ஆர்சேர்ப்பதில் தாமதம் போன்ற காரணத்தால். |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக செயலாற்றல் 19.77 சதவீதமானதுடன் திட்டமிடப்பட்ட செயலாற்றல் 24.05 சதவீதமாகும். செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக செயலாற்றல் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டமிட்டத்திலிருந்து 4.28 சதவீதம் பின்னாக காணப்பட்டமையுடன் உடன்பட்டனர்.

**கணக்காய்வாளர் பரிந்துரைகள்**

செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

### 3.2 பயன்படுத்தப்படாத/குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மொத்த நடைமுறை வேலை 233.35 மில்லியனில், மொத்தமாக ரூபா 90.57 மில்லியன் ஜாஎல பிரிவிலுள்ள சிலாபமிருந்து பேகலியகொட – புத்தளம் வீதிக்கான ஆரம்பகட்ட செயற்திட்ட நடவடிக்கைகள் மீது செய்யப்பட்டிருந்தது. அரசாங்க தீர்மானத்தின் பிரகாரம் மேற்கூறிய பிரிவு கைவிடப்பட்டிருந்தது. அதனால் அச் செலவினங்கள் ஒரு பலனற்றதாக காணப்பட்டது. | மீள்கட்டமைப்பிற்கான அமைச்சரவைப்பத்திரம் 2018 ஓகஸ்ட் 15 இல் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் செற்திட்டமானது திருத்தியமைக்கப்பட்டிருந்தது. பெகலியகொட/புத்தளம் வீதியின் மேம்படுத்தல், காணிகள் கட்டிடங்களிற்கான இழப்பீடுகள் டிசிஎஸ்பீ இன் வேலைப்பரப்பிலிருந்து முழுமையாக நீக்கப்பட்டிருந்தது. | நட்டங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மொத்தமாக ரூபா 236.12 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.5 மில்லியன் 2018 இல் விசேட (டொலர்) கணக்கிற்கு மாற்றியமைக்கப்பட்டிருந்தும், 58.19 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 137.4 மில்லியன் மாத்திரமே 2 வருடங்களின் பின்னர் செயற்திட்டதினால் பயன்படத்தப்பட்டிருந்ததுடன் மீள்மதிப்பீட்டு மிகை உள்ளடங்களாக மிகுதி தொகை ரூபா 137.07 மில்லயன் விசேட (டொலர்) | 2020 இன் செயற்திட்ட பரப்பில் மாற்றம் காரணமாக, உண்மையான கிரயம் 137.4 மில்லியன் (58.19%) ஆக இருந்தது. எனவே விசேட டொலர் கணக்கலுள்ள மீகுதித்தொகை ரூபா 137.07 மில்லியன் மீள் மதிப்பீட்டு மிகை உள்ளடங்களாக செலவிடப்படாமல் காணப்பட்டது. | செயற்திட்டதின் நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட வேண்டியதுடன் கடன் காலாவதியாவதற்கு முன்னர் பூர்த்தி செய்ய அவைகளை துரிதப்படுத்தவும் வேண்டும். |

கணக்கில் செலவு செய்யப்படாமல் காணப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| பெறுகைத்திட்டத்தின் பிரகாரம், செயற்திட்டமானது 2020 ஆம் ஆண்டின் போது மேல்உயத்தி (sky-lift) இரண்டு வலையமைப்பு அளவை வாகனம் (எப்டபல்யூடி) மற்றும் வீதி வெட்டும் இயந்திரம் போன்றவற்றை கொள்வனவு செய்ய திட்டமிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் திட்டமிட்ட பெறுகை நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தினால் செயற்படுத்தப்பட்ட இறக்குமதி வரையறைகள் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து அனுமதியை பெரலில் தாமதம் போன்ற காரணங்களால் பூர்த்தி செய்ய முடியாமல் போக கூடும். | செயற்திட்டமானது சொத்துக்களை கொள்வனவு செய்ய தேவையான அனைத்து சாத்தியமான நடவடிக்கைகள்/முயற்சிகளையும் எடுத்துள்ளது. இருப்பினும், தேசிய பாதீட்டு திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் தாமதமான நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்ர்பட்ட விடயங்கள்

| வெற்றிடங்கள் | பதவிகளின் எண்ணிக்கை | | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | கணக்காய்வாளர் பரிந்துரைகள |
| --- | --- | --- | --- | --- | --- |
| | அனுமதிக்கப் பட்டவை | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவறு உண்மை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | |
| பெறுகை நிபுனர். | 01 | - | 01 | பெறுகை நிபுனர், செயற்திட்ட பொறியியலாளர் மற்றும் ஜீஐஎஸ் ஆய்வாளர் போன்ற பதவிகளிற்கான 03 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. | செயற்திட்டத்தின் நடவடிக்கைள் 2023 மார்ச் 31 இல் கடன் காலாவதியாவதற்கு முன்னர் நெருக்கமாக கன்கானிக்கப்படல் வேண்டும். எனவே தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கவும் பட்டியலிடப்பட்ட திகதிகளில் செயற்திட்ட வேலைப்பரப்பினை பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| பொறியியலாளர்கள் பீஎஸ்-4. | 02 | 01 | 01 | | |
| ஜீடை ஆய்வாளர். | 01 | - | 01 | | |